Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 32 | செவ்வாய்க்கிழமை Tuesday | 02.12.2025 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு பேரிடர் நிவாரண நிதி

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை:

அக்டோபர் மாதத்தில் பெய்த மழையால் 33% மேல் பாதிக்கப்பட்ட 4,235 எக்டர் வேளாண் பயிர்களுக்கும், 345 எக்டர் தோட்டக் கலைப் பயிர்களுக்கும் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

முதல்வர் ஸ்டாலின் தலைமையில் டிட்வா புயல் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் பயிர்சேதங்கள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மழையினால், வேளாண் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து கணக்கெடுப்பு பணிகளை தொடங்கும்படியும், கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் தேங்கியுள்ள வெள்ள நீர் வடிவதற்கான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு முதல்வர் அறிவுறுத்தினார்.

அக் 2025 பெய்த மழையினால் ஏற்பட்ட பயிர் பாதிப்புகளுக்கான கணக்கெடுப்புப் பணிகள் முடிவடைந்து 33 சதவிகிதத்திற்கும் மேல் பாதிக்கப்பட்ட 4235 எக்டர் வேளாண் பயிர்களுக்கும், 345 எக்டர் தோட்டக்கலைப் பயிர்களுக்கும் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உரிய நிவாரணம் வழங்கிட உத்தரவிட்டார்.

டிட்வா புயல் காரணமாக குடிசை வீடுகள் மற்றும் இதர வீடுகளின் சேதங்கள், மனித உயிரிழப்புகள், கால்நடை உயிரிழப்புகள் போன்றவற்றிற்கு இழப்பீடுகளை கலெக்டர்கள் விரைந்து வழங்கிட வேண்டுமென்று முதல்வரால் அறிவுறுத்தப்பட்டது.

கனமழை காரணமாக பல்வேறு மாவட்டங்களில்39நிவாரணமுகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான குடிநீர், உணவு, மருத்துவ வசதிகள் உள்ளிட்டஅனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டும் என்றும், இப்பணிகளை தேவைப்படும் காலம் வரை தொடர்ந்து செய்து தர வேண்டும் என்றும் முதல்வர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பேரிடர் மற்றும் வடகிழக்கு பருவமழை தொடர்பாக ஏற்கனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மேலும்,28.11.2025அன்று சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, டித்வா புயல் காரணமாக அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட 14 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக, இன்றைய நாள் முதல்வர்தலைமையில்,வடகிழக்குப் பருவமழையால், குறிப்பாக டிட்வா புயல் காரணமாக டெல்டா மாவட்டங்களில் பெய்துள்ள கனமழை மற்றும் பிற மாவட்டங்களில் பரவலாக மழையும் பெய்து வருவதால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் பயிர்சேதம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தற்போது பெய்துவரும் மழையினால், வேளாண் பயிர்கள் குறிப்பாக நெற்பயிர் சேதம், இதர பயிர்கள் சேதம் குறித்தும், தோட்டக்கலைப் பயிர்கள் சேதம் குறித்தும் கணக்கெடுப்பு பணிகளை தொடங்கி, அதுதொடர்பாக உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள முதல்வர் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

மேலும், கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் தேங்கியுள்ள வெள்ள நீர் வடிவதற்கான அனைத்துப் பணிகளையும் உடனடியாகமேற்கொள்ளுமாறு முதல்வர் அறிவுறுத்தினார்.

மேலும், அக்டோபர், 2025மாதம்பெய்தமழையினால் ஏற்பட்ட பயிர்பாதிப்புகளுக்கான கணக்கெடுப்புப்பணிகள் முடிவடைந்து

33 சதவிகிதத்திற்கும் மேல் பாதிக்கப்பட்ட 4,235 எக்டர் வேளாண்பயிர்களுக்கும், 345 எக்டர் தோட்டக்கலைப் பயிர்களுக்கும் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உரிய நிவாரணம் வழங்கிட முதல்வர் உத்தரவிட்டார்.

டிட்வா புயல் காரணமாக குடிசை வீடுகள் மற்றும் இதர வீடுகளின் சேதங்கள், மனித உயிரிழப்புகள்,கால்நடை உயிரிழப்புகள் போன்றவற்றிற்கு இழப்பீடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விரைந்து வழங்கிட வேண்டுமென்று முதல்வரால் அறிவுறுத்தப்பட்டது.

கனமழை காரணமாக பல்வேறு மாவட்டங்களில்39நிவாரணமுகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான குடிநீர், உணவு, மருத்துவ வசதிகள் உள்ளிட்டஅனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டும் என்றும், இப்பணிகளை தேவைப்படும் காலம் வரை தொடர்ந்து செய்துதர வேண்டும் என்றும் முதல்வர் ஸ்டாலின் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

# சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் கனமழை தொடரும்; வானிலை ஆய்வு மையம் தகவல்



சென்னை,

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

அடுத்த ஏழு தினங்களுக்கான வானிலை முன்னறவிப்பு மற்றும் எச்சரிக்கை:

(30-11-2025) தென்மேற்குவங்கக்கடல்மற்றும் அதனை ஒட்டிய வடதமிழகம் புதுவை கடலோரப்பகுதிகளில் நிலவிய "டிட்வா" புயல், நேற்று 0530 மணி அளவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுக்குறைந்து அதே பகுதிகளில் நிலவியது. இது வடக்கு திசையில் மெதுவாக நகர்ந்து, இன்று (01-12-2025) காலை 08.30மணி அளவில், தென்மேற்கு வங்கக்கடல்மற்றும்அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகள் வடதமிழகம் புதுவை -தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளில், சென்னைக்கு கிழக்கு தென்கிழக்கே சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவிலும், புதுவைக்கு வடகிழக்கே 130 கிலோ மீட்டர் தொலைவிலும், கடலூருக்கு வடகிழக்கே 150 கிலோ மீட்டர் தொலைவிலும், நெல்லூருக்கு தெற்கு தென்கிழக்கே சுமார் 200 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலைகொண்டுள்ளது. அப்பொழுது, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் மையப்பகுதிகளிலிருந்து வடதமிழக-புதுவை கடற்கரைக்குமான குறைந்தபட்ச தூரம் 40 கிலோ மீட்டராக இருந்தது.

இது, அடுத்த 12 மணி நேரத்துக்கு, வடதமிழகம் புதுவை மற்றும் தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகளுக்கு இணையாக வடதிசையில் நகர்ந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுக்குறைந்து, தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவக்கூடும். அப்பொழுது, சென்னையிலிருந்து குறைந்தபட்ச தூரமானது 30 கிலோமீட்டராகவும் இருக்கக்கூடும்.

*01-12-2025:* தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்தது. சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கன முதல் மிககனமழையும்,செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் ராணிபேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

வடதமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் அதனைஒட்டியமாவட்டங்கள் மற்றும் புதுவையில் பலத்த தரைக்காற்றுமணிக்கு45முதல் 55கிலோமீட்டர்வேகத்தில் வீசக்கூடும்.

*02-12-2025:* தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

*03-12-2025 முதல் 05-12-2025வரை:* தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

*06-12-2025:* தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு:

மீனவர்களுக்கான எச்சரிக்கை:

வட தமிழகம் புதுவை கடலோரப்பகுதிகள்:

*01-12-2025* சூறாவளிக்காற்று மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்திலும்,மாலை முதல் காற்றின் வேகம் படிப்படியாக குறைந்து, மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். 02-12-2025 காலை முதல் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

தென் தமிழக கடலோரப்பகுதிகள், குமரிக்கடல் மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகள்:

*01-12-2025* சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். அதன் பிறகு, காற்றின் வேகம் படிப்படியாக குறைந்து *02-12-2025* காலை முதல் மணிக்கு40 முதல் 50கிலோமீட்டர்வேகத்திலும் இடையிடையே 60கிலோமீட்டர்வேகத்தில் வீசக்கூடும்.

தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகள்,தென்மேற்குவங்கக்கடல்மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகள்:

*01-12-2025* சூறாவளிக்காற்று மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 70 கிலோ மீட்டர் வேகத்திலும்,மாலைமுதல் காற்றின் வேகம் படிப்படியாக குறைந்து, மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்தில்வீசியது *02-12-2025* காலை முதல் மணிக்கு40 முதல் 50கிலோமீட்டர்வேகத்திலும் இடையிடையே 60கிலோமீட்டர்வேகத்தில் வீசியது

ஆழ் கடல் மீனவர்கள் மேற்குறிப்பிட்ட நாட்களில் இப்பகுதிகளை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# எஸ்.ஐ.ஆர். குறித்து விவாதிக்க கோரிய எதிர்க்கட்சிகள்..

## அமளியால் முடங்கிய நாடாளுமன்றம்



நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடர் தொடங்கியது. கூட்டம் தொடங்குவதற்கு முன்பாக நாடாளுமன்ற வளாகத்தில் பேசிய பிரதமர் மோடி, குளிர்காலக் கூட்டத்தொடர் என்பது ஒரு சடங்கு அல்ல, நாட்டை வளர்ச்சியின் பாதைக்கு அழைத்துச் செல்லும் முயற்சிகளுக்கு உதவும் நிகழ்வு என்றார்.

மேலும், மக்களின் பிரச்சனைகள் குறித்து கேள்வி எழுப்புவதில் எதிர்க்கட்சிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும், அவர்கள் தோல்வி பயத்தில் இருந்து வெளியே வர வேண்டும் என்றும் பிரதமர் கூறினார்.

மேலும் பிகார் தேர்தலில் வாக்காளர்களின் எண்ணிக்கை அவர்களுக்கு ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை காட்டுகிறது என்றும் குறிப்பாக பெண்களின் பங்களிப்பு நம்பிக்கையை தருகிறது என்றும் பிரதமர் மோடி பேசினார். இதனைத் தொடர்ந்து, மக்களவை காலை கூடியதும் ஒரு நாள் உலகக் கோப்பை மற்றும் உலக கபடி போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற இந்திய மகளிர் அணிகளுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து நேரமில்லா நேரத்தை ஒத்திவைத்துவிட்டு வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணி குறித்து விவாதிக்க வேண்டும் என்று திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. இதற்கு சபாநாயகர் ஓம் பிர்லா அனுமதி மறுத்ததால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து இருமுறை ஒத்திவைக்கப்பட்ட மக்களவை பின்னர் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது

செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள தாரமங்கலம் அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோவில் புதுப்பிக்கப்பட்டு 30.11.2025 குடமுழுக்கு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தார். இந்த குடமுழுக்கு விழாவில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## வெள்ளாலங்குளம் எம் ஜே பாண்டியன் அறக்கட்டளையின் சார்பில் கல்வித்தந்தை எம் ஜே பாண்டியன் நூற்றாண்டு விழா

வெள்ளாலங்குளம் எம் ஜே பாண்டியன் அறக்கட்டளையின் சார்பில் கல்வித்தந்தை எம் ஜே பாண்டியன் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பள்ளி குழந்தைகளுக்கு வழிகாட்டு புத்தகங்கள் வழங்கப்பட்டன. வெள்ளாளங்குளம் பகுதியில் மக்களுக்கு கல்வி முன்னேற்றம் வழங்கும் வகையில் கல்வி தொண்டு புரிந்த கல்வி தந்தை எம் ஜே பாண்டியன் நூற்றாண்டு விழா எம் ஜே பாண்டியன் அறக்கட்டளை சார்பில் நடந்தது நிகழ்ச்சிக்கு அறக்கட்டளையின் நிர்வாகி மணி பாரதி தலைமைவகித்தார். சங்கரன்கோவில் மணி, முன்னாள் குடியரசுத் தலைவரின் நேர்முக உதவியாளர் நடராஜன் வெள்ளாளங்குளம் விவேகானந்தா கல்லூரியின் நிர்வாக இயக்குனர் ஜெனிட்டா, வீரசிகாமணி விவேகானந்தா குளோபல் பள்ளி இயக்குனர் ஃபெலின்ஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வெள்ளாளங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் நாராயணன் வரவேற்புரை வழங்கி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியில் வெள்ளாளங்குளம் பகுதி மக்களின் கல்வி மற்றும் முன்னேற்றத்திற்கு எம் ஜே பாண்டியன் வழங்கிய தொண்டுகள் குறித்தும், அவரின் வழியில் கல்வி கற்று முன்னேற வேண்டியது குறித்தும் பேசினர்.

பள்ளி குழந்தைகளுக்கு டிஎன்பிஎஸ்சி உள்ளிட்ட அரசு தேர்வுகளில் வெற்றி பெறும் வகையில் வழிகாட்டி புத்தகங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் கோமதி அம்மாள் திருக்கோயில் ஒன்றாம் மண்டகப்படி தலைவர் பொன்மொழிச் சோழன், விக்னேஸ்வரன், பட்டிமன்ற பேச்சாளர் சங்கரேஸ்வரி, வென்றிலிங்கபுரம் பள்ளி தலைமை ஆசிரியர் சந்தனகுமார், பார்கவிராஜன், 18 கிராம கல்வி அறக்கட்டளை தலைவர் சமுத்திரக்கனி, முத்துசாமி, சித்தரேசன், அருணகிரி, சரவணவேல் முருகையா உட்பட ஏராளமான பொதுமக்களும், பள்ளி குழந்தைகளும் கலந்து கொண்டனர். பாண்டியன் நன்றி கூறினார்.



## ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

### தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (01.12.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை. மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, கலைஞரின் கனவு இல்லம், இலவச வீட்டுமனைபட்டா, பட்டா மாறுதல், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் எனமொத்தம்230மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்று உரியதுறைஅலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார். மேலும், முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

நேற்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தமிழ்வளர்ச்சித்துறையின் சார்பில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்ற 18 மாணவ, மாணவியர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், துணை இயக்குநர் (தமிழ் வளர்ச்சி) ஜோதி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மான்விழி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார் உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





### மதுராந்தகம் அருகே

## 60 ஆண்டு காலமாக சுயம்பு வடிவாக இருந்த அம்மனுக்கு கற்சிலை அமைத்து கும்பாபிஷேகம்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த கூடலூர் ஊராட்சியில் சுயம்பு வடிவாக இருந்த அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன்,

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் அம்மனுக்கு 60 ஆண்டுகள் கழித்து ஒரு கிராமமே ஒன்று கூடி கற்சிலை அமைத்து புதிதாக ஆலயம் கட்டி முடித்து

மூன்று நாட்கள் முன்னதாகவே சிவாச்சாரியார்கள் யாகசாலை அமைத்து கணபதி பூஜை மகா யாகங்கள் பூர்ணாதி என சகல பூஜைகள் செய்யப்பட்டு கோவில் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் யாகசாலையில் இருந்து கும்பங்கள் புறப்பட்டு கோவிலை வளம்வந்து விமான கலசத்திற்கு புனித நீர் ஊற்றி

ஜீர்ணோதரான நூதன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடத்தினர், பின்பு பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது

இக்கூடமுழுக்கு திருவிழாவை காண சுற்றுவட்டார பத்துக்கும் மேற்பட்ட கிராமத்தில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்; வருகிற 6ந் தேதி நடைபெறவுள்ளது

### ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி தகவல்




ஈரோடு மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறிவழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 06.12.2025 அன்று ஈரோடு மாவட்டம், வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற உள்ளது.

இம்முகாமை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பங்கேற்று பணிநியமன ஆணைகளை வழங்க உள்ளார். இம்முகாமில் 200 க்கும் மேற்பட்ட ஈரோடு, திருப்பூர், கோவை, சேலம் மற்றும் சென்னை மாவட்டங்களைச் சேர்ந்த முன்னணி தனியார்துறை நிறுவனங்களான HATSUN AGRO PRODUCT LIMITED, Q-GATE INFOTECH PVT LTD, SPIDER SOFT TECH DATA SERVICES, CYBERSPACE SECURITY SOLUTIONS PVT LTD, SBS TECHNOLOGIES, ATOZERV, SKM ANIMAL FEEDS AND FOODS, VARDHMAN YARNS AND THREADS, SAMDESA TECHNOLOGIES, LOTUS TVS, URD MOTORS, MILKY MIST DAIRY FOODS PVT LTD, GENNN AUTOMATION, BRITANNIA INDUSTRIES LTD, FLUXION SYSTEMS TECHNOLOGIES, AGNI STEELS PVT LTD, CORAL MANUFACTURING, NIRAL INFO TECH, CAVINKARE PRIVATELIMITED உள்ளிட்ட நிறுவனங்கள் பங்கேற்று 10,000- க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்குதகுதியான நபர்களைத் தேர்வு செய்ய உள்ளனர். இம்முகாம் முற்றிலும் இலவசமானதாகும்.

எனவே, ஈரோடு மாவட்டத்தில் தனியார்துறையில் பணிபுரிய ஆர்வமாக உள்ள அனைவரும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறும், இம்முகாமின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தனியார்துறையில் பணியமர்த்தம் செய்யப்படும் வேலைநாடுநர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எண் இரத்து செய்யப்படமாட்டாது என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தினை நேரிலோ அல்லது தொலைபேசி எண். 8675412356, 9499055942 வாயிலாகவும் தொடர்பு கொள்ளலாம். இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் முன்பதிவு செய்ய கீழ்கண்ட QRCode-ஐஸ்கேன் செய்தோ அல்லது www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்திலோ கட்டாயம் முன்பதிவு செய்யலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்து உள்ளார்.

## சபரிமலை சன்னிதானத்தில் போட்டோ அய்யப்பன் சிலை கொண்டு செல்ல தடை



சபரிமலை: சபரிமலையில் போட்டோ எடுக்க, அய்யப்பன் சிலைகளை கொண்டு செல்ல தேவசம் போர்டு தடை விதித்துள்ளது.

கேரள உயர்நீதிமன்ற உத்தரவின்படி, சபரிமலையில் நடப்பு சீசனில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. இங்கு பணிபுரியும் பூஜாரிகளுக்கு பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், சபரிமலை சன்னிதான திருமுற்றத்தில், பக்தர்கள் தங்கள் மொபைல் போன்களில் போட்டோ எடுக்க தடை செய்யப்பட்டுள்ளது. இதை மீறுபவர்களின் மொபைல் போன் பறிமுதல் செய்யப்படுவதுடன் அபராதமும் விதிக்கப்படும் என தேவசம்போர்டு அறிவித்துள்ளது.

ஏற்கனவே, செய்தியாளர்களுக்கும் இங்கு கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில நாட்களில் மட்டுமே செய்தியாளர்கள் திருமுற்ற த்தில் போட்டோ எடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் பக்தர்கள், அய்யப்பன் சிலைகளை இருமுடி கட்டுடன் கொண்டு வந்து, அய்யப்பனை தரிசனம் நடத்திய பின், ஊருக்கு கொண்டு செல்வது வழக்கம். தற்போது இதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. படியேறும் முன் அதை எங்காவது வைத்துவிட்டு, அய்யப்பனை தரிசித்து திரும்பி போகும் போது எடுத்து செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது. பம்பைநதியில் பக்தர்கள் களையும் ஆடைகளை எடுப்பதற்கு குத்தகை விடப்பட்டுள்ளது. ஆனாலும் நதியில் குவியும் ஆடைகளை அள்ளுவது சிரமமாக உள்ளது. கேரள உயர்நீதிமன்ற உத்தரவுப்படி இதற்காக கூடுதல் ஊழியர்கள் நியமிக்கப்படுவர் என்றும், 15 ஊழியர்கள் பம்பை நதிக்கரையில் ஒவ்வொரு 750 மீட்டர் இடைவெளியில் நின்று, தொடர்ந்து அறிவிப்புகளை வெளியிட்டுக்கொண்டிருப்பர் என்றும் தேவசம் போர்டு கூறியுள்ளது.


வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959



தாராபுரத்தில் நீர்நிலை ஆக்கிரமிப்பு அகற்றக் கோரி இந்து பாதுகாப்பு படை சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு வழங்கப்பட்டபோது எடுத்த படம்

### திருப்பூர் மாவட்ட

## இந்து பாதுகாப்பு படை சார்பாக கலெக்டரிடம் மனு



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தாலுகா கொளிஞ்சிவாடி வாய்க்கால் மேட்டு பகுதியில் நீர்நிலை களை ஆக்கிரமித்து வீடு கட்டி உள்ளனர் இது சம்பந்தமாக 2021 ஆம் ஆண்டு நீர்நிலைகளை அகற்றக்கோரி யாரும் அகற்ற வில்லை அதன் பிறகு அவர்களுக்கு மாற்று இடம் கொளத்து ப்பாளை யம் கிராம த்தில் வழங்கப்பட்டது கொளத்து ப்பாளையத்தில் இலவச வீட்டு மனை பட்டாக்களை பெற்றுக்கொண்டு அங்கு செல்லாமல் இந்த நீர்நிலை ஆக்கிரமிப்புக் பகுதியிலே குடியிருந்து வருகின்றன இங்குகுடியிருப்பதால்விவசாயிகளின்போக்குவரத்து மற்றும் விவசாயத்துக்கு பயன்படும் வாகனங்கள் செல்ல மிகவும் சிரமமாக உள்ளது என விவசாயிகள் மிகுந்த வேதனைப்படுகின்றனர் ஆகவே இதற்கு விரைவில் நடவடிக்கைஎடுக்ககோரி இந்து பாதுகாப்பு படை தேசிய தலைவர் கண்ணன் ஜி அவர்களின் அறிவுறுத்தலின்படிதிருப்பூர்மாவட்டஇந்துபாதுகாப்பு படை சார்பாக மாவட்ட ஆட்சியரிடம் இந்து பாதுகாப்பு படையின் மாநில ஒருங்கிணைப்பு செயலாளர் ஆறுமுகம் அவர்கள் மனு அளித்தார்

### உளுந்தூர்பேட்டை அருகே உள்ள மடப்பட்டு பெட்ரோல் பங்கில் அங்கு பணியாற்றும் ஊழியர்

## பணப்பையை அறுத்து எடுத்துச் சென்ற கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 17 வயது சிறுவன் உட்பட இருவரை போலீசார் கைது செய்தனர்




கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள மடப்பட்டு கிராமத்தில் இயங்கி வரும் பெட்ரோல் பங்க் ஒன்றில் விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் பகுதியைச் சேர்ந்த ஐயப்பன் என்ற 35 வயது இளைஞர் பணியாற்றிவருகிறார் இவர் பெட்ரோல் போடும் பணி செய்து வரும் நிலையில் இருசக்கர வாகனத்தில் வந்த இருவர் பெட்ரோல் போட்டு விட்டு பெட்ரோல் பங்க் ஊழியர் தொல் பட்டையில் மாட்டி இருந்த பணப்பையை பறித்து இருசக்கர வாகனத்தை வேகமாக இயக்கிச் சென்றனர் அந்த ஊழியர் சுமார் 25 மீட்டர் விரட்டிச் சென்றார் இது குறித்தான வீடியோ காட்சிகள் பெட்ரோல் பங்கில் அமைக்கப்பட்டிருந்த சிசிடிவி கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருந்தது அதனைக் கொண்டு உளுந்தூர்பேட்டை உட்கோட்டை குற்ற பிரிவு போலீசார் பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டனர் அதில் 23 வயதான கடலூர் மாவட்டம் குமாரபுரம் கிராமத்தைச் சேர்ந்த விக்கி என்கிற விக்னேஸ்வரன் என்று இளைஞரும் 17 வயதான அவரது நண்பரும் சேர்ந்து பணம் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்டது தெரிய வந்தது இதையடுத்து இருவரையும் கைது செய்த திருநாவலூர் போலீசார் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து இருவரையும் உளுந்தூர்பேட்டை குற்றவியல் நீதிபதி முன்பு ஆஜர்படுத்தி விக்னேஸ்வரனை விழுப்புரம் மத்திய சிறையில் அடைத்ததோடு 17 வயது சிறுவனை சிறுவர் சீர்திருத்த பள்ளிக்கு அனுப்பி வைத்தனர்



தாய்லாந்துநாட்டில்பட்டாயா,சத்தாஹிப்சொன்புரியில்21.11.2025முதல்30.11.2025 வரை நடைபெற்ற UWSFF உலக பவர்லிஃப்டிங் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா நாட்டின் சார்பில் தமிழ்நாடு அமெச்சூர் பவர்லிஃப்டிங் அசோசியேஷன் மூலமாக தமிழ்நாட்டைச் சேர்ந்த ஈரோடு மாநகர் சூரம்பட்டி பகுதியில் வசித்து வருகின்ற டி.திவாகர் என்பவர் 56 கிலோ எடை பிரிவில் வெயிட்லிஃப்டிங்கில் 185 கிலோ தூக்கி முதலிடம் பெற்று சாதனை நிகழ்த்தி உலக அரங்கில் இந்தியாவிற்கு பெருமை சேர்த்துள்ளார். பொதுமக்கள்,விளையாட்டு வீரர்கள் என பலரும் வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.



உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (01.12.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை, மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் சார்பில் வாகனங்களில் விழிப்புணர்வு ஒட்டு வில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



ஈரோடு மக்களே இரண்டு சக்கர வாகனத்தில் செல்லும் போது பெண்கள் அணியும் ஆடைகளில் கவனமுடன் இருக்க வேண்டும், ஆடையின் ஏதேனும் சிறு பகுதி கூட வாகனத்தின் சக்கரத்தில் மாட்டிக்கொண்டால் விபத்து ஏற்படக்கூடும்.எனவே பொதுமக்கள் பாதுகாப்பாகப் பயணிக்க வேண்டும் என்று ஈரோடு மாவட்டக் காவல்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

# ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு உலக எய்ட்ஸ் தின விழிப்புணர்வு பேரணி மற்றும் கையெழுத்து இயக்கத்தினை துவக்கி வைத்தார்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை, மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும்கட்டுப்பாடு அலகின் சார்பில் உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு,மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (01.12.2025) உலக எய்ட்ஸ் தின விழிப்புணர்வு பேரணியினை துவக்கி வைத்தார்.

உலக எய்ட்ஸ் தினமானது ஆண்டுதோறும் டிசம்பர் முதல் நாள் உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, நேற்றைய தினம் மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை, மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும்கட்டுப்பாடு அலகின் சார்பில் உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியினை ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கொடியசைத்து துவக்கி வைத்தார். கல்லூரி மாணவ மாணவியர்கள் பங்கேற்ற இப்பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தொடங்கி பளையபாளையம் பேருந்து நிறுத்தம் வரை சென்றடைந்தது. இப்பேரணியில் 500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் விழிப்புணர்வு பதாகைகளை கைகளில் ஏந்திச் சென்று வழிநெடுகிலும் விழிப்புணர்வு ஏற்படுத்திச் சென்றனர். மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் , எச்.ஐ.வி/எய்ட்ஸ் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை கையெழுத்திட்டுதுவக்கி வைத்தும், வாகனங்களில் விழிப்புணர்வு ஒட்டு வில்லலைகளை ஒட்டியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் உலக எய்ட்ஸ் தின உறுதி மொழியான,

"எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் குறித்து முழுமையாக அறிந்திடுவேன். அறிந்ததை என் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் தெரிவித்திடுவேன். புதிய எச்.ஐ.வி /எய்ட்ஸ் தொற்று இல்லாத குடும்பம் மற்றும் சமூகத்தை உருவாக்க பாடுபடுவேன். தன்னார்வமாக இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள முன் வருவேன்.எச்.ஐ.வி.மற்றும் எய்ட்ஸ் தொற்றுள்ளோரை அரவணைப்பேன். அவர்களுக்கு சம உரிமை அளிப்பேன் என உளமார உறுதி ஏற்கிறேன்" என்று, பின்தொடர்ந்து வாசித்து மாணவ, மாணவியர்கள், அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.








முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர்,எய்ட்ஸ் விழிப்பணர்வு குறித்து பள்ளி மாணவ, மாணவியர்களுக்கிடையே நடைபெற்ற வினாடிவினா போட்டி மற்றும்கல்லூரிமாணவ, மாணவியர்களுக்கிடையே ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் தனித்தனியே நடைபெற்ற மாரத்தான் போட்டியிலும் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பு.அருணா, இணைஇயக்குநர்(நலப்பணிகள்) (பொ) மரு. வெங்கடேஷ், துணை இயக்குநர் (தொழுநோய்) மரு.ரவீந்திரன், மாநகர நல அலுவலர் மரு.கார்த்திகேயன், மாவட்ட திட்ட மேலாளர் (மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலகு) பெ.துரைசாமி உட்பட தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்க ஊழியர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (01.12.2025) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை, மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகின் சார்பில் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

# அதிமுகவிற்கு துரோகம் செய்தவர்களை ஆண்டவன் தண்டிப்பார்;மதுரையில் டி.டி.வி.தினகரன் பேட்டி



மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் அம்மா மக்கள் முன்னேற்ற கழக நிர்வாகியின் இல்ல விழாவிற்கு வந்த அக்கட்சியின் பொதுச் செயலாளர் டி டி வி தினகரன் இன்று வருகை தந்தார். நிர்வாகி குடும்பத்தினருக்கு வாழ்த்து தெரிவித்து அதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த டிடிவி தினகரனிடம் டிசம்பரில் கூட்டணி குறித்து அறிவிப்பதாக தெரிவித்திருந்தீர்களே என்ற செய்தியாளர்கள் கேள்விக்கு டிசம்பர் 31ஆம் தேதி வரை உள்ளது அதற்குள் கூட்டணி அறிவிக்க வேண்டும் என்று சட்டம் ஏதும் போட்டிருக்கிறீர்களா? என பேசிய டிடிவி தினகரன் கூட்டணி குறித்து பல்வேறு கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளதாகவும் கூட்டணி உறுதியான பின்பு அது குறித்து தெரிவிப்பது சிறந்ததாக இருக்கும் என தெரிவித்தார்

அதிமுகவிற்கு துரோகம் செய்தவர்களை ஆண்டவன் தண்டிப்பார் என எடப்பாடி பழனிச்சாமி பேசியது குறித்த கேள்விக்கு

துரோகத்திற்கு நோபல் பரிசு கொடுக்கலாம் என்றால் அது எடப்பாடிக்கு கொடுக்க வேண்டும் என செங்கோட்டையன் கூறியுள்ளார்.2017 இல் இருந்து தற்போது வரை அவர் செய்த துரோகங்களுக்கு ஆண்டவன் தண்டனை வழங்கிக் கொண்டிருக்கிறார்.2026 தேர்தலில் மக்கள் மூலம் அவரது துரோகத்திற்கு இறுதி தீர்ப்பு எழுதப்படும் என்றார்.

தொடர்ந்து ஓட்டு கேட்கும் போது உங்களிடம் கேட்டார்.ராஜினாமா செய்யும்போது உங்களை கேட்டாரா? என எடப்பாடி கோபிசெட்டிபாளையத்தில் பேசியது குறித்த கேள்விக்குபதில் அளித்த டிடிவி தினகரன் 2017 ல்திமுக கொண்டு வந்த நம்பிக்கை இல்ல தீர்மானத்தில் எடப்பாடிக்கு ஆதரவாக இருந்து அவரை முதல்வராகிய 18 எம்எல்ஏக்கள். இவரால் ஜெயித்தவர்கள் அல்ல இவருடைய அடையாளத்தால் அவர்கள் ஜெயிக்கவில்லை ஆனால் 18 எம்எல்ஏக்களையும் தகுதி நீக்கம் செய்யும் போது தொகுதி மக்களிடம் கேட்டு தான் தகுதி நீக்கம் செய்தாரா?அதேபோல் எம்ஜிஆர் அவர்கள் கொண்டுவந்த சட்ட விதிகளை எல்லாம் தனக்கு சாதகமாக மாற்றிக் கொண்டு தன்னை சுற்றி சில கைத்தடிகளை வைத்துக்கொண்டு சட்டவிதிகளை மாற்றினார். அதிமுக தொண்டர்கள் எல்லோரையும் கேட்டுத்தான் மாற்றினாரா? இன்றைக்கு அதிமுக என்ற கட்சியை இல்லாமல் செய்து இரட்டை இலை சின்னம் கையில் இருக்கிறது என்ற அகம்பாவம்ஆணவம் பதவி வெறியில்,பணத்திமிரில் பேசிக்கொண்டிருக்கும்- எடப்பாடி பழனிச்சாமிக்கு இந்த தேர்தலில் மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள்.இரட்டை இலையை இன்று எடப்பாடி பழனிச்சாமி மிகவும் பலவீனப்படுத்தி வருகிறார்.அதிமுகஎன்ற கட்சியை எடப்பாடி அதிமுக என மாற்றி அதை ஒரு வட்டார கட்சியாகவும் குடும்ப கட்சியாகவும் மாற்றி வருகிறார். அங்கிருக்க கூடிய தொண்டர்கள் எல்லாம் தூங்குவது போல் நடித்தாலும் 2026 தேர்தலுக்குப் பின்னர் விழித்துக் கொள்வார்கள் என்றார். தொடர்ந்து பாஜக கூட்டணிக்கு ஏதும் அழைத்தார்களா என்ற கேள்விக்கு இல்லை என்று பதில் அளித்தார் முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் வரும் 15ஆம் தேதி வரை எடப்பாடிக்கு கடு வித்து இருக்கிறார் என்ற கேள்விக்கு 15 ஆம் தேதி வரை பொறுத்து இருந்து பார்ப்போம் என்று கூறிவிட்டு புறப்பட்டு சென்றார்.

# ரஷ்யாவிடமிருந்து போர் விமானங்கள், எஸ் 500 பாதுகாப்பு கவசம் வாங்குகிறது இந்தியா



பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று, புடின் வரும் டிசம்பர் 4 மற்றும் 5ம் தேதிகளில் நம் நாட்டிற்கு வருகை தருகிறார். அவர் பிரதமர் மோடியை சந்தித்து இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்த இருக்கிறார். உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தபின் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் முதல் இந்திய பயணம் இது என்பதால், முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இதற்கு முன், 2021 டிசம்பர் மாதம்,இந்தியாவிற்கு புடின் வந்தார்.

இந்த சூழலில், இரு நாடுகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தையில் போர் விமானங்கள் மற்றும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை வாங்குவது குறித்து இந்தியா விவாதிக்கத் திட்டமிட்டுள்ளது. பிரதமர் மோடி உடன் புடின் சந்திப்பின்போது, ரஷ்யாவின் அதிநவீன எஸ்யூ-57 போர் விமானங்கள் மற்றும் எஸ்-500 ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை வாங்குவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாக வாய்ப்புள்ளது.எஸ் 500 என்பது உலகின் முன்னணி ஏவுகணை பாதுகாப்பு கவச வாகனம் ஆகும். இது, ஆப்பரேஷன் சிந்துாரில் இந்தியா பயன்படுத்திய எஸ் 400 கவச வாகனத்தை காட்டிலும் சக்தி வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஈரோடு மாவட்டத்திற்கு (30.11.2025) அன்று வருகை தந்ததையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி விஜயமங்கலம் சுங்கச்சாவடி அருகில் புத்தகம் வழங்கி வரவேற்றார். இந்த நிகழ்வில் ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.சுஜாதா உடனிருந்தார்.




கவிஞர் ஈரோடு தமிழன்பன் நினைவேந்தல் கூட்டம் பெரியார் மன்றத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கவிஞர் ஈரோடு தமிழன்பன் திரு உருவ படத்தை திறந்து வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஆட்சி தலைவர் கந்தசாமி ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ,மக்கள் சிந்தனை பேரவை தலைவர் குணசேகரன், மாவட்ட கல்வி அதிகாரி மற்றும் தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடியில் உள்ள சுப்பையா வித்யாலயம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 388 மாணவியருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் விலையில்லா மிதிவண்டிகளை மாண்புமிகு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் முன்னிலையில் வழங்கி உரையாற்றினார்.

இந்நிகழ்வின்போது முதன்மை கல்வி அலுவலர் சங்கீதா சின்னராணி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செந்தில்வேல் முருகன், மாவட்ட கல்வி அலுவலர் சிதம்பரநாதன், மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவர் கலைச்செல்வி மற்றும் பள்ளி நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்

### மாநில அளவில் சிறந்த நூலக ஆர்வலருக்கான விருது பெற்ற

# தூத்துக்குடி மாநகராட்சி 34வது காங்கிரஸ் கவுன்சிலர் சந்திரபோஸ்க்கு பாராட்டு விழா





தூத்துக்குடி சின்னமணி நகர் பகுதியில் அமைந்துள்ள சி.எம். என் கிளப்பில் சிறந்த

நூலகம் அமைத்துக் கொடுத்ததற்கு 34வது காங்கிரஸ் கவுன்சிலர் சந்திரபோஸ்

தேர்வு செய்யப்பட்டு விருதை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விருது வாங்கியதற்கு நேற்று பாராட்டு விழா சி எம் என் கிளப் சார்பாக நடைபெற்றது.

விழாவில் தமிழ்நாடு காங்கிரஸ் மாநிலத் துணைத் தலைவர் ஏ.பி.சி. சண்முகம் கலந்து கொண்டு நூலகம் அமைத்ததற்கு சந்திரபோஸ் பாராட்டி இதுபோல்தொடர்ந்துநடைபெறவேண்டும்நூலகம் அமைத்து பெரிய விஷயம் மேலும் இது போல் தொடர வேண்டும் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து அனைத்து கிளப் நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டுசால்வு அணிவித்து பாராட்டினர்.

# ஈஷா லிங்க பைரவியில் 'பூதசுத்தி விவாஹா' முறையில் நடைபெற்ற நடிகை சமந்தா பிரபு, ராஜ் நிடிமொருவின் திருமணம்



கோவை,

நடிகை சமந்தா ரூத் பிரபு மற்றும் திரைப்பட தயாரிப்பாளர் ராஜ் நிடிமொரு ஆகியோரின் திருமணம், கோவை ஈஷா யோகா மையத்தில் அமைந்துள்ள லிங்க பைரவி தேவி சன்னிதியில் இன்று (01/12/2025) காலை பூதசுத்தி விவாஹா முறையில் நடைபெற்றது. இந்தத் தனிப்பட்ட திருமண வைபவத்தில் நெருங்கிய குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் மட்டும் கலந்துகொண்டனர்.

லிங்க பைரவி சன்னிதிகளிலோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலோவழங்கப்படும் பூதசுத்திவிவாஹா திருமண செயல்முறை, தம்பதியருக்கு இடையில் ஆழமான பிணைப்பை ஏற்படுத்தும் யோக விஞ்ஞானத்துடன் வழங்கப்படுகிறது.

இந்தச் செயல்முறையின் மூலம், பஞ்சபூதங்கள் சுத்திகரிக்கப்பட்டு, இருவருக்குமான திருமண உறவு பிரதிஷ்டை செய்யப்படுகிறது

. மேலும் தம்பதியர் தங்களது எண்ணம், உணர்ச்சி மற்றும் உடல் தாண்டிய சங்கமத்தை உணர்வதற்கான சாத்தியத்தை பூதசுத்தி விவாஹா வழங்குகிறது.

ஈஷா அறக்கட்டளை, சமந்தா மற்றும் ராஜுக்கு மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. தேவியின் எல்லையற்ற அருளும், பேரானந்தமும் அவர்களின் இணைவில் நிறைந்து இருக்கவாழ்த்துகிறது.

ஈஷா யோகா மையத்தில் சத்குருவால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கபைரவி தேவி, பெண்தன்மையின் சக்திமிக்க வெளிப்பாடாகும். லிங்கபைரவி வளாகம் மக்களின் வாழ்வை வளமாக்கும் சடங்குகளுக்கு ஒரு துடிப்பான இருப்பிடமாகத் திகழ்கிறது. இங்கு ஒருவரின் பிறப்பு முதல் இறப்பு வரை, வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தேவியின் அருளைப் பெறும் வகையிலான சடங்குகள் நடைபெறுகின்றன.

# திருப்பரங்குன்றம் மலை உச்சியில் இருக்கும் தீபத்துாணில் கார்த்திகை தீபம் ஏற்றலாம்: உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பு



திருப்பரங்குன்றம்மலை உச்சியில் அமைந்துள்ள தீபத்துாணிலும் டிச.,3ல் கார்த்திகை தீபம் ஏற்ற அனுமதி வழங்கி, உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பளித்தது.

மதுரை, திருப்பரங்குன்றம் மலை மேலுள்ள உச்சிப்பிள்ளையார் கோவில் மண்டபம் அருகிலுள்ள மண்டபத்தின்மேல்சுப்பிரமணிய சுவாமி கோவில் சார்பில் ஆண்டு தோறும் கார்த்திகை மகா தீபம் ஏற்றப்படுகிறது.

மலை உச்சியில் தீபத்துாணில் கார்த்திகை தீபம் ஏற்றுவது காலங்காலமாக நடந்து வந்தது. இரண்டாம் உலகப்போரின் போது, பாதுகாப்பு காரணமாக, ஆங்கிலேய அரசு அதை தடை செய்தது. அதனால், கோவில் முன்புறம் உள்ள துாணில் தீபம் ஏற்றப்பட்டது. அந்த நடைமுறை இதுவரை மாறவில்லை.

இதை மாற்றக்கோரியும், திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்துாணில் கார்த்திகை தீபம் ஏற்ற அனுமதிக்க உத்தரவிட கோரியும் உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மதுரைமாவட்டம்,எழுமலை ராம ரவிக்குமார் தாக்கல் செய்த அந்த மனு விவரம்: திருப்பரங்குன்றம் மலை யில் டிச., 3ல் கார்த்திகை தீபம் ஏற்ற ஏற்பாடு செய்ய, சுப்பிரமணிய சுவாமி கோவில் நிர்வாகத்திற்கு மனு அனுப்பினேன். மலை உச்சியிலுள்ள,பழமையான தீபத்துாணில் கார்த்திகை தீபம் ஏற்ற சட்ட ரீதியாக தடை இல்லை. தர்காவில் இருந்து, 15 மீட்டர் தொலைவில் உள்ளது. பதிலாக, மலையிலுள்ள உச்சிப்பிள்ளையார் கோவில் தீப மண்டபத்தில் தீபம் ஏற்ற கோவில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அது சட்டவிரோதம். தீபத்துாணில் தீபம் ஏற்ற அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு குறிப்பிட்டார்.

நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் விசாரித்தார். அறநிலையத்துறை தரப்பு மூத்த வழக்கறிஞர் சண்முகசுந்தரம், 'பாரம்பரியமாக உச்சிப்பிள்ளையார் கோவில் தீபத்துாணில் தீபம் ஏற்றப்படுகிறது. தவறான உள்நோக்கில், ஆதாரம் இல்லாமல் ராமரவிக்குமார் மனு செய்துள்ளார்' என, வாதிட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், அனைத்து தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டறிந்தார். திருப்பரங்குன்றம் மலை உச்சிக்கு நேரில் சென்றும் பார்வையிட்டார். விசாரணை முடிவில் இன்றுதீர்ப்புவழங்கப்பட்டது. மலை உச்சியில் இருக்கும் தீபத்துாணிலும் கார்த்திகை தீபம் ஏற்றலாம் என நீதிபதி தீர்ப்பில் தெரிவித்துள்ளார். இந்து சமயநிலையத்துறை மற்றும் வக்பு வாரியத்தின் கருத்துக்களை கேட்ட நீதிபதி, இவ்வாறு உத்தரவை பிறப்பித்தார்.

# "Those Who Bite Sit Inside": Row After Congress MP Renuka Chowdhury Brings Dog To Parliament





*The Congress found itself in a rather unusual controversy after a party lawmaker arrived at Parliament with a puppy this morning. What sparked outrage was their Rajya Sabha MP Renuka Chowdhury's analogy between the pawed animal and the MPs and ministers present inside. She defended her act, saying, "those who bite are inside the parliament," a remark that the BJP called an insult to the MPs and the parliament.*

*Chowdhury reached the parliament today to attend the Winter Session. To everyone's surprise, she was accompanied by a puppy. Though she sent the puppy home in her car, the unusual companion triggered talks on parliamentary protocol.*

*The Congress MP wasn't happy with what came across as criticism. She claimed she adopted the puppy while on her way to parliament and sought to know if any law bars a member from coming with a dog.*

*According to sources, her action was reported to the Rajya Sabha Secretariat and a CCTV video of her entry is under scrutiny. "What protocol? Is there a law? While on my way to Parliament House, I spotted the puppy near a collision site. Afraid that it could be run over, I picked it up and brought it here in the car. Then I sent it back home," she told reporters.*

*How could anyone object to an act of saving the life of an animal, she asked.*

*Turning the conversation to criticism, she then targeted the government. "Those who bite are sitting inside the parliament and running the government. Is there no problem with that? If I take care of an animal, it becomes a topic of discussion," she said, adding that she has adopted many indie dogs from the streets in the past.*

*The BJP wasn't cnvinced. They branded it a "drama" and accused Chowdhury of insulting the parliament. Spokesperson Shehzad Poonawala said that the Congress MP has compared all her colleagues and parliamentary staff to a dog.*

*"Renuka Chaudhary has insulted Parliament and MPs. She brings a dog to Parliament, and when asked about it, she says that those who bite are inside. That means the Parliament, Parliamentary staff, and the MPs. They are dogs, in her opinion. She has in the past also insulted our jawans when she mocked Operation Mahadev and Operation Sindoor," said Poonawala.*

# நவம்பர் மாதம் ஜிஎஸ்டி வரி வசூல் ரூ.1.70 லட்சம் கோடி

புதுடில்லி: நடப்பு 2025 நவம்பர் மாதம் நாட்டின் மொத்த ஜி.எஸ்.டி., வரி வசூல் 1.70 லட்சம் கோடி ரூபாயாக உள்ளதாக அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்தாண்டு நவம்பர் மாத வரி வசூலை, முந்தைய ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 0.7 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்தாண்டு ரூ.1 லட்சத்து 70 ஆயிரத்து 276 கோடி வசூல் ஆகியுள்ளது. எனினும், அக்.2025ல் இந்த வரி வசூல் ரூ.1 லட்சத்து 96 ஆயிரம் கோடியாக இருந்தது. செப்டம்பர் 22ல் நூற்றுக்க ணக்கான பொருட்கள் மீதான ஜிஎஸ்டி வரியை மத்திய அரசு குறைத்தது. மேலும் வரி அடுக்குகளிலும் மாற்றம் கொண்டு வரப்பட்டது. 2025ம் ஆண்டு ஏப்ரல் முதல் நவம்பர் வரை ஜிஎஸ்டி வரி வசூல் ரூ.14 லட்சத்து 75 ஆயிரத்து 488 கோடியாக இருக்கிறது.



Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.